நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 218/2021

அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியகுமாரி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

30th day of May 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.57 )

நான் தற்போது மந்தக்கரை சிதம்பரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு ஒரு மகள் ஒரு மகன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி எனது நாத்தனார் மகன். எனது மகள் அபிராமியின் கணவர். ஆஜர் எதிரியின் வீடு எங்கள் வீட்டில் இருந்து 10 வீடு தள்ளி இருக்கிறது. ஆஜர் எதிரி எனது கணவரிடம் எனது மகளை திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டார். எனது கணவர் எதிரியின் பெற்றோருடன் வந்து கேட்குமாறு சொல்லிவிட்டார். எனது மகள் அபிராமி பட்டப்படிப்பு முடித்த 10 நாட்களுக்குள் 2017–ம் ஆண்டு சிதம்பரத்தில் உள்ள ஒரு நகைகடைக்கு வேலைக்கு அனுப்பினேன். எனது மகள் வேலைக்கு சென்ற 10 நாட்களிலேயே எதிரி வினோத்குமார் எனது மகளை கடத்திக்கொண்டு போய் திருமணம் செய்து கொண்டுவிட்டார். அன்று மாலை எங்களுக்கு தெரிந்து எனது மகளையும் மருமகனையும் கூப்பிடபோனோம். எதிரியின் வீட்டில் எனது மகளை அனுப்ப முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனது மகள் அபிராமிக்கு திருமணமாகி ஒரு வருடம் கழித்த பின்னர் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்று சொன்னார்கள். அதன்பிறகு எனது மகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று வினோத்தின் அம்மா, அப்பா வந்து என்னிடம் வம்பு வளர்த்தார்கள். அப்போது

சண்டை மிகவும் பெரிதாக நடந்ததால் சிதம்பரம் நகர காவல்நிலையத்தில் எதிரியின் அம்மா, அப்பா, எதிரி மீது நான் புகார் கொடுத்தேன். எனது மகள் அபிராமி இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் எனது பெரிய நாத்தனார் மகனுக்கு நடந்த திருமணத்திற்கு போனார். அந்த திருமணத்தில் சீர் வரிசை அதிகமாக வந்ததால் நீயும் போய் உங்க அம்மா, அப்பாவிடம் வாங்கி கொண்டு வா என்று எனது மகள் அபிராமியின் மாமனார், மாமியார் மற்றும் கணவர் சொன்னதாக எனது மகள் அபிராமி எனது வீட்டின் வாசற்படி அருகே வந்து என்னிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குள் வராமல் ரோட்டிலேயே நின்று விட்டு போய்விட்டார். அதற்கு பிறகு இரண்டு நாட்கள் கழித்து எனது மகள் அபிராமி எதிரி வினோத்குமாரின் வீட்டில் தூக்குமாட்டிக் கொண்டு இறந்துவிட்டதாக சொல்லிக்கொண்டு ரோட்டில் சொல்லிக்கொண்டே அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பெரியாஸ்பித்திரிக்கு ஓடினார்கள். மறுநாள் சிதம்பரத்தில் உள்ள பெரியாஸ்பித்திரியில் போய் பார்த்தோம். எனது மகள் இறந்த அன்றே சிதம்பரம் காவல்நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார். 2019-ம் ஆண்டில் இது நடந்தது. தேதி 03.11.2019. போலிசார் என்னை விசாரித்தார்கள். (முடிக்கப்பட்ட நேரம் 01.10)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.45 )

என்னை போலிசார் 3-ம் தேதியும் மற்றும் 6-ம் தேதியும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னை 4-ம் தேதி ஆர்டிஓ விசாரித்தார்களா என்றால் விசாரித்தார். ஆர்டிஓ என்னை விசாரித்தபோது எனது மகள் ஓடிச்சென்று எங்களுக்கு தெரியாமல் எதிரியை திருமணம் செய்து கொண்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு கோவம் வந்து எனது மகள் கழுத்தில் இருந்த தாலியை இழுத்ததாக நான் ஆர்டிஓ என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனது மகள் வீட்டிற்கு எனது மகள் அபிராமிக்கு குழந்தை பிறந்த பிறகு நானும் செல்லவில்லை எனது மகள் அபிராமியும் எனது வீட்டிற்கு வரவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆர்டிஓ என்னை விசாரித்தபோது "அபிராமி இறப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்பு எனது மாமியார் அபிராமியை பார்த்து உனக்கு என்ன தலையெழுத்தா என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதார் என்றும் அதற்கு அபிராமி எனது வீட்டு வாசலில் எனது மாமியாரைப் பார்த்து உனது மகள்களுக்கு நீ என்ன செய்தாய் என்னை பற்றி ஏன் கூறுகிறாய்" என்று சொன்னதாக நான் சொன்னேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆர்டிஓ என்னை விசாரித்தபோதும் போலிசார் என்னை விசாரித்தபோதும் "திருமணத்தில் சீர் வரிசை அதிகமாக வந்ததால் நீயும் போய் உங்க அம்மா, அப்பாவிடம் வாங்கி கொண்டு வா என்று எனது மகள் அபிராமியின் மாமனார், மாமியார் மற்றும் கணவர் சொன்னதாக எனது மகள்

அபிராமி எனது வீட்டின் வாசற்படி அருகே வந்து என்னிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குள் வராமல் ரோட்டிலேயே நின்று விட்டு போய்விட்டார்" என்று சொல்லவில்லை என்று சொன்னால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வீடும் ஆஜர் எதிரியின் வீடும் இன்றும் ஒரே தெருவில் தான் உள்ளது என்றால் சரிதான். எனது மகள் அபிராமியின் மகளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இன்று வரை எனது மகள் அபிராமியின் மகளை எதிரியின் குடும்பத்தார் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். எனது மகளுக்கு எதிரியாலோ அல்லது எதிரியின் குடும்பத்தாலோ எவ்வித வரதட்சணை பிரச்சனையும் நடக்கவில்லை என்றும் எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. எனது நாத்தனாரான எதிரியின் அம்மாவின் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக எனது மகள் வரதட்சணை கொடுமை காரணமாக இறந்துவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் திருமணம் செய்து கொண்ட செலவு, Reception, வளைகாப்பு, பிரசவம் மற்றும் அனைத்து செலவுகளையும் எதிரியும் அவரது குடும்பத்தாரும் தான் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியின் குடும்பத்திற்கு என்னிடம் வரதட்சணை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 2.59 )

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.